அவர்கள் வழியில் பட்டு விவசாயிகள் நலன் காத்திட தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கிவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது சார்பிலும், துறையின் சார்பிலும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

4. தகவல் கோரல்

(அ) ஸ்டெர்லைட் ஆலை குறித்து மதுரை உயர் நீதிமன்றத்தின் கருத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை குறித்து நேற்றையதினம் உயர் நீதிமன்றத்தினுடைய மதுரை கிளையில் உள்ள நீதிபதிகள் சில கருத்துகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூடப்போகிறோம் என்ற ஓர் அரசாணையை ஏற்கெனவே இந்த அரசு வெளியிட்டிருக்கிறது. ஆக, இந்த ** நியாயமாக, உளப்பூர்வமாக அதை மூடிவிட வேண்டுமென்று அரசு கருதுமென்று சொன்னால், கொள்கை முடிவை குறிப்பாக அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி. . .

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். இதுகுறித்து நீங்கள் zero hour–ல் raise செய்வது குறித்து சபை நடத்துவதில் எனக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகள் குறித்து உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதாவது மதுரை உயர் நீதிமன்றக் கிளை சில கருத்துகளைச் சொல்லியிருக்கிறது. (குறுக்கீடு) அதனால்தான் நீங்கள் சொல்வது வரையிலும் நான் பொறுமையாக இருந்தேன். அந்தக் கருத்துகளின் அடிப்படையில் மேற்கொண்டு என்ன விவரம் என்பதை அரசு தெரிவிப்பதற்கு மதுரை உயர் நீதிமன்றக் கிளை வழக்கை திரும்பவும் 22 ஆம் தேதிக்கு ஒத்தி வைத்திருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2018 ஜூன் 14] **[பேரவைத் தலைவர்]**

(குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு பத்திரிகையில் நீங்கள் நிறைய படித்திருப்பீர்கள். நானும் படித்திருக்கிறேன். மதுரை உயர் நீதிமன்றக் கிளை suggestion என்கின்ற அளவிலே சில கருத்துகளைத்தான் சொல்லியிருக்கிறது. அதுகுறித்து ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஸ்டெர்லைட் ஆலை சம்பந்தமாகப் பேசுகின்றபோது, நீங்கள் கருத்துகளைத் தெளிவாக இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறீர்கள். ஆகவே, மதுரைக் கிளை சொல்லியிருப்பதன்மீது மேலும் விவாதம் வேண்டாம். (குறுக்கீடுகள்) இந்த அவையினுடைய விதி உங்களுக்கு நன்றாகத் தெரியும். விதி 92(1)–ன்கீழ் தொடர்ச்சியாக நீதிமன்றத்தினுடைய விசாரணையில் இருக்கும் விஷயத்தை மேற்கொண்டு நாம் இங்கே விவாதிக்க வேண்டாம். (குறுக்கீடுகள்) இல்லை. நீங்கள் ஏற்கெனவே suggestion சொல்லியிருக்கிறீர்கள். மதுரைக் கிளை சில கருத்துகளைச் சொல்லியிருக்கிறது. அந்தக் கருத்துகளின் அடிப்படையில் 22 ஆம் தேதி அங்கே மீண்டும் விசாரணை நடக்க இருக்கிறது. ஆகவே, அந்த விசாரணையின் முடிவிற்கு நாம் குந்தகம் விளைவிக்கும் வகையிலே எந்தக் கருத்துகளையும் சொல்ல வேண்டாம் என்பதாலே, அதை விட்டுவிடலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்ன suggestion இந்த அவையிலே ஏற்கெனவே பதிவாகியிருக்கிறது. அரசாங்கம் உயர் நீதிமன்றம் சொல்லியிருப்பதையும் பரிசீலிக்கும். அவ்வளவுதான்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய மதுரைக் கிளை நீதிபதிகள் இதைக் கருத்தாக எடுத்துச் சொல்லி இருக்கக்கூடிய காரணத்தால், அரசை இதே அவையிலே நான் ஏற்கெனவே வலியுறுத்தியிருக்கிறேன். நீங்கள் சொன்னதுபோல இதே அவையிலே வலியுறுத்தியிருக்கிறேன். அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி தீர்மானம் போடுங்கள். சட்டமன்றத்தைக் கூட்டி தீர்மானம் போடுங்கள். அப்போதுதான் அது நிரந்தரமாக மூடப்படக்கூடிய சூழல் வரும். ஆகவே, அதை மீண்டும் இந்த அரசுக்கு வலியுறுத்தி, நான் அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னதுபோல அரசு போட்ட அந்த உத்தரவை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை நிராகரிக்கவில்லை. கருத்தைத்தான் சொல்லியிருக்கிறது. (குறுக்கீடுகள்) ஆகவே, நீங்கள் சொன்னதுபோல் நிராகரிக்கவில்லை.

** இருக்கவில்லை. சில கருத்துகளைத்தான் சொல்லியிருக்கிறது. அதன் அடிப்படையிலே, மேற்கொண்டு விசாரணை 22 ஆம் தேதி நடபெற இருக்கிறது. ஆகவே, நீதிமன்றம் ** என்று சொன்னதாக நாம் பொருள்கொள்ள முடியாது. ஆகவே, அது அவைக் குறிப்பில் இருக்க வேண்டியதில்லை. (குறுக்கீடுகள்) இருங்கள். நான் சொன்ன கருத்துகளும் அவைக் குறிப்பில் வேண்டாமென்று நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதற்கு நான் முழு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் உங்களுடைய கருத்துகளை, நீங்கள் வலியுறுத்தி சொல்லியிருக்கின்ற கருத்துகளைப் பதிவு செய்யச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் சொன்னதாக ஒரு பொருள் கொள்வது, அது பதிவானால் நாளைக்குத் திரும்ப விசாரணைக்கு வருகின்றபோது நீதிமன்றத்திலே பேசிய கருத்துகளைத் திரும்பவும் நீதிமன்ற விசாரணையில் இருக்கின்றபோது ** இருக்கின்றதா, இல்லையா ** என்ற பொருள் இந்த அவையிலே விவாதமாக இருக்கக் கூடாது என்பதாலேதான், அந்த வார்த்தையை எடுத்தேன். வேறு அல்ல. நீங்கள் சொன்ன கருத்துகளை, மீண்டும் வலியுறுத்தியதை நான் பதிவு செய்து கொண்டிருக்கிறேன். ஆகவே, அந்த வகையிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. தயவு செய்து அமருங்கள். இன்னும் நிறைய பிரச்சினைகள் எழுப்புவதற்கு இன்றைக்கு வாய்ப்புக் கேட்டிருக்கிறீர்கள். நான் அதற்கெல்லாம் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு observation–ஐ High Court–ல் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Observation தான். கோர்ட் உத்தரவு மாதிரி எதுவும் சொல்லவில்லை. அது ** என்று சொல்லவில்லை.

முற்பகல் 11–35

திரு.துரைமுருகன்: நீங்கள் சொல்வதை நான் ஒத்துக்கொள்கிறேன், சார். Observation என்றால் உங்களுக்கும் தெரியும். எனக்கும் தெரியும். இதுமாதிரி ஒரு observation செய்திருக்கிறார்கள் என்று தெரிந்தவுடனே எதிர்க்கட்சித் தலைவர் என்ன செய்வார்? அது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2018 ஜூன் 14] [திரு. துரைமுருகன்]

அவருடைய கடமை. இந்தமாதிரி சொல்லியிருக்கிறார்களே, அதனால், நீங்கள் அமைச்சரவையைக் கூட்டி, தீர்மானத்தைக் கொண்டு வருகிறீர்களா என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்கிறார். முடியும் அல்லது முடியாது என்று சொல்லுங்கள். அதைவிட்டுவிட்டு, expunge *செய்கிறேன்,* expunge *செய்கிறேன் என்று சொன்னால் எப்படி?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, எல்லாவற்றையும் நான்* expunge *செய்யவில்லை என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். எதிர்க்கட்சித் தலைவர், முழுமையாகப் பேசுவதற்கும், தனது கருத்துகளைச் சொல்வதற்கும், அவருடைய* suggestion*–ஐ எடுத்துரைக்கவும். . .*

திரு. துரைமுருகன்: *அவற்றையெல்லாம் நீங்கள் நன்றாகச் செய்கிறீர்கள். ஆனால் கருத்துகளை* expunge *செய்கிறேன் என்கிறீர்களே?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அவருடைய* suggestion*–ஐ மீண்டும் பதிவு செய்வதிலே எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை. அதை நான் ஏற்றுக்கொண்டு, பதிவு செய்திருக்கிறேன். ஒத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், நீதிமன்றம் ** என்று சொன்னதை மட்டும். . . (குறுக்கீடு) அது எப்படி எனக்குத் தெரியும்?*

திரு. துரைமுருகன்: *அதை எடுத்ததோடு மட்டும் விட்டுவிடுங்கள், கவலையில்லை. (குறுக்கீடு) நீதிமன்றம் ** என்ற ஒரு வரியை மட்டும் வேண்டுமானால் எடுத்துவிடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைத்தான் நீக்கியிருக்கிறேன். அவ்வளவுதான்.*

திரு. துரைமுருகன்: *மற்றவையெல்லாம் இருக்கட்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மற்றவையெல்லாம் இருக்கின்றன. மற்றவற்றை நான் நீக்கவில்லை. நீதிமன்றம் ** என்று சொன்னதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைத்தான் நான் நீக்கியிருக்கிறேன். நான்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

பேசியது உட்பட அந்த வார்த்தைகளைத்தான் நீக்கியிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, அவர் பேசியதை மட்டும் நான் நீக்கவில்லை. நான் பேசியது உட்பட நீக்கியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதனால் ஒன்றுமில்லை, விடுங்கள். (குறுக்கீடு) தூத்துக்குடி என்று நீங்கள் சொன்னதையெல்லாம் இன்றைக்குப் பதிவு செய்திருக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உட்காருங்கள். அப்படியெல்லாம் நான் எதையும் முழுவதுமாக நீக்கவில்லை. (குறுக்கீடு) அப்படியெல்லாம் செய்ய முடியாது. நீங்கள் உங்கள் கருத்துகளை முழுமையாகச் சொல்வதற்கு நான் அனுமதி அளித்திருக்கிறேன். (குறுக்கீடு) நீதிமன்றம் சொல்லாததை நாம் இந்த மன்றத்திலே பதிவு செய்தால், நாளைக்கு அது தவறாகிப் போய்விடும். 22 ஆம் தேதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு வர இருக்கிறது. மேற்கொண்டு அதில் என்ன வருகிறது என்று பார்ப்போம். இறுதியாணை வரட்டும். அதற்குப் பின்னர் நீங்கள் ஏதாவது பேசுவதாக இருந்தால், அதைப்பற்றி அப்போது பார்க்கலாம். (குறுக்கீடு) விடுங்கள். அதைப்பற்றி பிறகு பார்க்கலாம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். உங்களுடைய கோரிக்கையையும் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள், பேசாமல் கொஞ்சம் பொறுமையாக இருங்கள். (குறுக்கீடு) ஒரு வாரம் விடுமுறை என்பதால், இன்றைக்கு நிறைய அலுவல்கள் இருக்கின்றன. நிறைய உறுப்பினர்கள் நிறைய கேட்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அனைவரையும் அனுமதிக்கும் முடிவில் நான் இருக்கிறேன். ஆகவே, சற்று பொறுமையாக இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்ல விரும்புவதை, சொல்லி முடிக்கட்டும். பிறகு நான் ஒவ்வொருவருக்கும் வாய்ப்புத் தருகிறேன்.

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) கொளத்தூர் தொகுதி, உயர் மின் அழுத்தக் கம்பிகளை புதைவடக் கம்பிகளாக மாற்றுதல் மற்றும் போதிய மின் நிலையங்கள் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. கொளத்தூர் தொகுதியில் குடியிருப்புப் பகுதிகளுக்குமேல் செல்கிற உயர் மின் அழுத்தக் கம்பிகளை புதைவடக் கம்பிகளாக மாற்றுவது குறித்தும், போதிய மின் நிலையங்கள் அமைப்பது குறித்தும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு